# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.75** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 9/2007*

## பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :-

***1***. இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப்பெயர்.*

***2***. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஓராம் உட் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்," என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,-

(i) 2007, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கு கின்ற ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில் ; அத்துடன்

(ii) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண் டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மை யின் இயைபான மொத்த விற்பனை வரவு ஏழு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்,

அத்தகைய இயைபான காலாண்டிற்காக அத்தகைய ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிடமிருந்து சேவை விதிப்பனவு விதிக்கப்படுதல் ஆகாது :";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில், "எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையினால்" என்னும் சொற்களிலிருந்து அப்பந்தியின் முடிவுவரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் உற்பத்திசெய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத ஏதேனும் பொருட்களின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்றதாக -

(i) 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கி 2007, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் இயைபான காலாண்டுக்கு, எவரேனுமாளினால் அல்லது பங்காண்மையினால் உற்பத்திசெய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத எவையேனும் பொருட்களின் மொத்த விற்பனை வியாபாரத்தை அல்லது சில்லறை விற்பனை வியாபாரத்தைக் கையாளுகின்ற அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலை ; அத்துடன்

(ii) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் இயைபான காலாண்டுக்கு -

(அ) உற்பத்திசெய்யும் ஏதேனும் தொழிலாக ; அத்துடன்

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட

*மீளத் திறக்கப்பட்ட தொழிற்சாலையொன்றின் ஏதேனும் தொழிலாகவுள்ள,*

*இல்லாத ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலை, உள்ளடக்குதலாகாது.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது* :-

(1) *அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்* :-

"(3) *விடயத்துக்கேற்ப, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளுக்கிணங்கக் கழிப்பனவு செய்த பின்னர் பொருளாதார சேவை விதிப்பனவாக அறவிடப்பட்ட தொகையின் மீதி ஏதேனுமிருப்பின் அது, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் நான்காண்டுக் காலப்பகுதியினுள் அடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காலத்திற்கும் பங்கிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கென அவ்வாறு பங்கிடப்பட்ட தொகையானது, அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையின் பங்காளரினால் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து எவ்வளவிற்குக் கழிக்கப்படக்கூடுமோ அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்.*";

(2) *அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை அதன் (4) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்*

(3) *மீள இலக்கமிடப்பட்ட (4) ஆம் உட்பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்* :-

"(ஆ) *(3) ஆம் உட்பிரிவிற்கிணங்க அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீதியினது கழிப்பனவின் பின்னர் எஞ்சியுள்ள பாகம் ஏதேனும் இருப்பின் அது, முதலாவதாகக் குறிப்பிடப்*

பட்ட வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் நான்காவது ஆண்டை அடுத்துறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காகச் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, "3 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் இயைபான காலாண்டுக்காகப் பொருளாதார சேவை விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எவரேனுமாள் அல்லது பங்காண்மை, தகுந்த தொகைக்குக் குறைவாக வரிமதிப்பீடுசெய்யப்பட்டுள்ளார் அல்லது வரிமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என வரிமதிப்பீட்டாளரொருவருக்குத் தோன்றுமிடத்து, வரிமதிப்பீட்டாளரானவர், (3) ஆம் உட்பிரிவினதும் (4) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, (தொடக்கத்தில் வரிமதிப்பீடு செய்யப்பட்ட தொகையுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய ஆள் அல்லது பங்காண்மை, அவரது அபிப்பிராயத்தில், வரிமதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டிய) மேலதிகத் தொகைக்காக அத்தகைய ஆளை அல்லது பங்காண்மையை வரிமதிப்பீடு செய்யலாமென்பதுடன், அதன்மேல், வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தல், மேன்முறையீடு மற்றும் வேறு வழக்கு நடவடிக்கைகள் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய மேலதிகத் தொகையை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) பொருளாதார சேவை விதிப்பனவு பற்றிய விபரத்திரட்டொன்றை ஆளொருவர் அல்லது பங்காண்மையொன்று கொடுத்துதவியுள்ளவிடத்து, வரிமதிப்பீட்டாளர், (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் அத்தகைய ஆளின் மீதான அல்லது பங்காண்மையின் மீதான வரிமதிப்பீடொன்றைச் செய்கையில், ஒன்றில் -

(அ) அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டை ஏற்றுக்கொள்ளலாம் ; அல்லது

(ஆ) அவ்வாளினால் அல்லது பங்காண்மையினால் அளிக்கப்பட்ட விபரத்திரட்டை ஏற்றுக் கொள்ள மறுக்கலாம் என்பதுடன், இயைபான மொத்த விற்பனைத் தொகையை மதிப்பீடுசெய்து அதற்கிணங்க அத்தகைய ஆளை அல்லது பங்காண்மையை வரிமதிப்பீடு செய்யலாம் :

ஆயின், எவரேனுமாளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டொன்றை வரிமதிப்பீட்டாளர் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவிடத்தும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளின்மீது அல்லது பங்காண்மையின்மீது ஏதேனும் இயைபான காலாண்டுக்கான வரிமதிப்பீடொன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றைச் செய்யுமிடத்தும், அவ்வாளினால் அல்லது அப்பங்காண்மையினால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டைத் தாம் ஏன் ஏற்றுக்கொள்ளாமலிருக்கின்றார் என்பதற்கான காரணங்களைக் கூறி, அத்தகைய ஆளுக்கு அவர் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(4) ஏழாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேதிகளில் அல்லது அவற்றின் முன்னர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலுள்ள ஏதேனும் இயைபான காலாண்டுக்காக விபரத்திரட்டொன்றை அளித்துள்ள ஆளொருவர் தொடர்பில் அல்லது

பங்காண்மை யொன்று தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வரிமதிப்பீடெதுவும் அல்லது மேலதிக வரிமதிப் பீடு, அவரது அல்லது அதன் வருமானம் பற்றிய விபரத்திரட்டு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டிருப்பின், அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப் பீட்டாண்டினுள் அடங்குகின்றதோ அந்த வரிமதிப் பீட்டாண்டின் முடிவிலிருந்து பதினெட்டு மாதங்கள் முடிவுற்றதன் பின்னர் மட்டுமே அளிக்கப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, ஆள் என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், அவ்வரைவிலக் கணத்தின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரு வதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(இ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் வரைவிலக் கணங்கூறப்பட்டவாறான ஏதேனும் அரசாங்க நிறுவனத்தை அல்லது ஏதேனும் உள்ளூரதி காரசபையை,".

*முதன்மைச் சட்டவாக்கத்துக் கான அட்ட வணையைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படு கின்றது :–

"**அட்டவணை**

| செலுத்தத்தகு மொத்த விற்பனை வரவின் பாகம் | அப்பாகத்துக்கு ஏற்புடையதான சேவைவிதிப்பனவு வீதம் |
|---|---|
| 1. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலிருந் தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள வாறான இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம் : | |
| (i) வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலி ருந்தான இலாபமும் வருமானமும். | |

| | |
|---|---|
| (ii) *1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் தொழில் முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அத்தகைய உடன்படிக்கையின்கீழ் எக்காலப் பகுதிக்காக வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாகவுள்ளனவோ அக்காலப்பகுதியின்போதான இயைபான மொத்தவிற்பனை வரவைக் கொண்டள்ள அத்தகைய தொழில் முயற்சி.* | *0.25 சதவீதம்* |
| *2. விற்பனையாளரினால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத (மோட்டார் வாகனங்களிலான அல்லது மதுபானத்திலான விநியோகிப்பாளரொருவராக அல்லது விற்பனையாளரொருவராகத் தவிர) அத்தகைய பொருட்களின் மொத்தவிற்பனையை அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்தவிற்பனை வரவின் அத்தகைய பாகம்.* | *0.25 சதவீதம்* |
| *3. உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய், தென்னந்தும்பு, கொப்பறா மற்றும் ஷீட் இறப்பர் என்பன உட்படவும் ஆனால் ஏதேனும் மதுசாரம் கலந்த குடிவகையைத் தயாரிக்கும் அத்தகைய ஏதேனும் மாற்றத்தைத் தவிர்த்தும், ஏதேனும் தேயிலை, இறப்பர் அல்லது தெங்குப் பெருந்தோட்டத்தின் ஏதேனும் விளைச்சலின் முதனிலை மாற்றத்திலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம்* | *0.25 சதவீதம்* |

*4. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்தவிற்பைன வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம்*

(i) *அவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும், உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிலுள்ள 28 ஆம் விடயத்திற்றவிர அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலவை.*

| | |
|---|---|
| (ii) *1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சியின் இலாபங்களும் வருமான மும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு வீதத்துக்குச் சமமானவொரு வீதத்தில் எக் காலப்பகுதிக்காக வரிசெலுத்தற்பாலனவாக வுள்ளனவோ அக்காலப்பகுதியின்போதான இயைபான மொத்தவிற்பனை வரவைக் கொண்டுள்ள அத்தகைய தொழில் முயற்சி.* | *0.5 சதவீதம்* |
| 5. *விற்பனையாளரினால் உற்பத்தி செய்யப்படாத மோட்டார் வாகனங்களின் அல்லது மதுபானத்தின் மொத்தவிற்பனையை (விநியோகிப்பாளர் தவிர) அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழி லிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண் டுள்ள இயைபான மொத்தவிற்பனை வரவின் அத்தகைய பாகம்.* | *0.5 சதவீதம்* |
| 6. *ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல் லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவின் இலாபங்களும் வருமானமும், உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் அ அல்லது ஆ(i) இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் வருமான வரி விதிக்கப்படற்பாலனவாகவுள்ள (அத்தகைய மொத்த விற்பனை வரவு இவ்வட்டவணையின் 1 ஆம், 2 ஆம் அல்லது 3 ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்த மொத்தவிற்பனை வரவினுள் அடங்கும் விடயத்திற்றவிர) மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம்.* | *0.5 சதவீதம்* |
| 7. *விநியோகிப்பாளரொருவரின் வியாபாரத்திலிருந் தான அல்லது தொழிலிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்தவிற்பனை வரவின் அத்தகைய பாகம்.* | *0.05 சதவீதம்* |
| 8. *ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலிருந் தான இலாபங்களும் வருமானமும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் வீதம் தவிர்ந்த எவ்வீதத்திலும்* | |

| | |
|---|---|
| வருமானவரி விதிக்கப்படற்பாலனவாகவுள்ள மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | 1.0 சதவீதம் |
| 9. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையின் 28 ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டுநடாத்தும் ஏதேனும் வியாபாரம் அல்லது தொழிலிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்தவிற்பனை வரவின் அத்தகைய பாகம். | 1.0 சதவீதம் |
| 10. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிலிருந்தான இயைபான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | 0.1 சதவீதம் |
| 11. பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவாறான இயைபான மொத்தவிற்பனை வரவின் அத்தகைய பாகம் :– | |
| (i) ஆடைகளை ஏற்றுமதி செய்வதிலிருந்தான அல்லது ஆடை ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக ஆடைகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆட்களுக்கு உள்ளூரில் உற்பத்திசெயப்பட்ட புடவைகளை வழங்குவதிலிருந்தான மொத்தவிற்பனை வரவு. (ii) முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார மனையொன்று ஆடைகளை ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அளவுக்கு அத்தகைய வியாபார மனையின் மொத்தவிற்பனை வரவு | 0.1 சதவீதம் |
| 12. மேலே 1 தொடக்கம் 11 வரையான எந்தவொரு விடயங்களிலும் குறிப்பீடுசெய்யப்படாத ஏதேனும் இயைபான மொத்த விற்பனை வரவு | 1.0 சதவீதம் |

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*